# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

முறையீட்டு மனு எண்: 189/மா/2019
ஆணை நாள்: 28.1.2020

திரு. V. கார்த்திகேயன்,
திண்டுக்கல். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி. – எதிர் மனுதாரர்

திண்டுக்கல் மாநகராட்சி, சோலைஹால் ரோடு, எண். 102, என்ற முகவரியில் வசிக்கும் திரு. V. கார்த்திகேயன் என்பவரது 07.11.2019 நாளிட்ட மனு 18.11.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு முறையீட்டு மனு எண். 189/மா/2019 என எண்ணிடப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை பெறப்பட்டு, கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

**ஆணை**

முறையீட்டு மனுதாரர் 07.11.2019 நாளிட்ட தனது முறையீட்டு மனுவில் தனது தந்தை மாநகராட்சில் பணிபுரிந்து 8.5.2015-ல் காலமாகிவிட்டார் என்றும் தனக்கு கருணை அடிப்படையில் வேலை வழங்க கோரி அனைத்து ஆவணங்களும் திண்டுக்கல் மாநகராட்சியில் சமர்ப்பித்து விட்டதாகவும், ஆனால் மாநகராட்சி கருணை அடிப்படையில் வேலை வழங்கோரிய விண்ணப்பதாரருக்கு எந்த தகவலும் தரவில்லை என்றும், இதற்கான தீர்வு வழங்க கோரியுள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 28.11.2019 நாளிட்ட அறிவிப்பாணையில், முறையீட்டு மனுதாரரின் மனு மீதான அறிக்கையினை சமர்ப்பிக்க திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் தனது 20.01.2020 நாளிட்ட அறிக்கையில் முறையீட்டு மனுதாரர் திரு.வி.கார்த்திகேயன் என்பவரின் தந்தை திரு. வெங்கடாசலபதி / ரெங்கராஜ் என்பவர் இம்மாநகராட்சியில் துப்புரவு பணியாளராக

பணியாற்றி வந்து கடந்த 08.05.2015 அன்று பணியிடை காலஞ்சென்றதைத் தொடர்ந்து 23.11.2015 அன்று தனக்கு கருணை அடிப்படையிலான பணி வழங்ககோரி தேவையான ஆவணங்களை முழுமையாக இணைக்கப்படாமல் மனு செய்திருந்தார் என்றும், அம்மாநகராட்சியின் கடிதம் ஒ.மு.எண்.2002/2015 எச்2 நாள் 24.07.2017ம் தேதிய அறிவிப்பின் மூலம் உரிய அனைத்து ஆவணங்களுடன் ,பணியாளர் காலஞ்சென்று 3 ஆண்டுகளுக்குள் (7.5.2018 க்குள்) மீளவும் விண்ணப்பிக்க தெரிவிக்கப்பட்டது என்றும், அதன்படி மனுதாரர் 29.01.2018 ஆம் தேதிய தனது விண்ணப்பத்துடன் தேவையான அனைத்து ஆவணங்களுடன் மீளவும் சமர்ப்பித்துள்ளார் என்றும், திண்டுக்கல் நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பின்னர் புதிய பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படாததாலும், மாநகராட்சியின் நிர்வாக செலவினம் 49 சதவீதத்திற்கு மேல் உள்ளதாலும், அரசாணை (பத்தாண்டு) எண். 19 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப-1) துறை நாள் 18.01.2007-ன்படி தற்போதைய நிலையில் கருணை அடிப்படையிலான பணியிடங்கள் நிரப்பப்பட இயலாத நிலை உள்ளது என்றும் இருப்பினும், பணியிடை காலஞ்சென்ற துப்புரவு பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி வழங்கிட சிறப்பு அனுமதி வழங்கிடக்கோரி இவ்வலுவலக கடிதங்கள் ந.க.எண்.10485/2019/எச்2-ன் வழியாக அரசிற்கு தொடர்ந்து கருத்துருக்கள் அனுப்பப்பட்டு அரசின் அனுமதியினை எதிர்நோக்கப்படுகிறது என்றும், மேற்காணும் விபரங்கள் மனுதாரருக்கு ந.க.எண்.10485/2019/எச்2 நாள் 27.11.2019-ம் தேதிய அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 9.12.2019 நாளிட்ட அழைபாணையின்படி முறையீட்டு மனுதாரர் 21.01.2020 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் தனது தந்தையார் திரு. வெங்கடாசலபதி திண்டுக்கல் மாநகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வந்த நிலையில் 8.5.2015-ல் காலமானார் என்றும், உரிய ஆவணங்கள் மாநகராட்சியில் சமர்ப்பித்துள்ளேன் என்றும், கருணையின் அடிப்படையில் தனக்கு பணி வழங்க ஆவண செய்யுமாறு தெரிவித்தார்.

இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, வாக்குமூலம் மற்றும் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஏற்கப்பட்டது திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தபடி அரசிற்கு அனுப்பப்பட்டுள்ள கருத்துருக்கள் மீது தொடர்

நடவடிக்கை மேற்கொண்டு உரிய விதிகளின்படி முறையீட்டு மனுதாரரின் கோரிக்கையின் மீது நடவடிக்கை மேற்கொள்ள திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 28–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவிப்பதிவாளர்.

பெறுநர்:

1) திரு. V. கார்த்திகேயன்,
த/பெ. வெங்கடாசலபதி,
102, சோலை ஹால் ரோடு,
பிரபு மருத்துவமனை அருகில்,
திண்டுக்கல்.

2) ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல்.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
-இ.கோ./ உதிரிகள்